1967 ஜூலை 18] [திரு. சி. என். அண்ணாதுரை]

நண்பர் திரு. ஆதிமூலம் அவர்கள், "தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத் திற்காகத் தன்னைத் தானே தியாகம் செய்து கொண்ட சங்கரலிங்கனார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்" என்று குறிப் பிட்டார்கள். அதையும் அத்தனைபேரும் உள்ளத்திலே, கருத்திலே கொள்ளுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். அவருடைய எண்ணங் கள் இன்றையதினம் ஈடேறத்தக்க நிலை கிடைத்திருப்பதும், அந்த நிலையை உருவாக்குவதிலே நாம் அனைவரும் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதும் நமக்கெல்லாம் நம் வாழ்நாள் முழுவதும் பெருமைப்படத்தக்க காரிய மாகும்.

நம்முடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் நெடுங்காலத்திற்குப் பிறகு நம்முடைய இல்லங்களிலே அமர்ந்து பேசிக் கொள்ளுகின்ற நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள இருக்கிறார்கள். "என்னுடைய பாட்ட னார் காலத்திலே தான் நம்முடைய நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் இடப்பட்டது; எதிர்க்கட்சியில் உட்கார்ந்து கொண்டிருந்த என்னுடைய பாட்டனார் கருத்திருமன் இதை ஆதரித்தார்" என்று கருத்திருமன் பேரப் பிள்ளைகளும், எங்களுடைய பேரப் பிள்ளைகளும் எதிர்காலத்திலே பேசக்கூடிய நல்ல நிலைமைகளையெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்ப்பார் களேயானால் நிச்சயமாக அந்த "ஆலோசனையை"க் கூடச் சொல்லாமல் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஒரு துளியும் ஐயப்பாடு கொள்ள வில்லை. ஆகையினால் இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளு கின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி இருக் கின்ற இந்த நன்னாளில் "தமிழ்நாடு" என்று நான் சொன்னதும் "வாழ்க" என்று அவை உறுப்பினர்கள் சொல்லுவதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு !

உறுப்பினர்கள் : வாழ்க !

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு !

உறுப்பினர்கள் : வாழ்க !

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு !

உறுப்பினர்கள் : வாழ்க !

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு மேலாக 17—6—1967 அன்று தொடங்கப்பட்ட பேரவையின் கூட்டத் தொடர், இன்றுடன் முடிவடைகிறது. நாள்தோறும் நடைபெற்ற கூட்டங் களைச் சிறப்பாகவும், கண்ணியத்துடனும் நடத்திக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். மீண்டும் பேரவை கூடுகின்ற நாள் குறிப்பிடாமல், பேரவைக் கூட்டம் இன்று முடிவடைகிறது. பிற்பகல் 1-30

பின்னர் பேரவை நாள் குறிக்கப்படாமல் ஒற்றி வைக்கப்பட்டது.

10. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

*238. Notification issued with G.O. Ms. No. 728, Agriculture, dated the 28th February 1967, declaring the area of the Srivaikuntam market specified in the schedule of the notification and the

area of ten miles around that market comprised in the revenue villages to be notified market areas of the Srivaikuntam market for the purpose of the Madras Agricultural Produce Markets Act, 1959 in respect of cotton, chillies and groundnut. [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

*239. Notification issued with G.O. Ms. No. 628, Revenue, dated the 20th March 1967, effecting ryotwari settlement of Minor Inams in the Javadi Hill villages in Tirupathur and Vellore taluks of North Arcot district in accordance with the provisions of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963. [*Laid on the Table of the House under section* 48 (5) *of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari Act*, 1963 (*Madras Act* 30 *of* 1963].)

*240. Notification issued with G.O. Ms. No. 466, Rural Development and Local Administration, dated the 4th March 1967, making certain amendments to the Madras Panchayats Act, 1958 relating to assessment and collection of taxes by panchayats. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

*241. Audit Report on the Annual Accounts of the Madras State Electricity Board for the year 1965–66 and Balance Sheet as on 31st March 1966. [*Laid on the Table of the House under section* 69 (5) *of the Electricity (Supply) Act*, 1948 (*Central Act* 54 *of* 1948).]

242. Notification issued with G.O. Ms. No. 532, Home, dated the 21st February 1967, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931, the vehicles belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the District Health Officer, Madurai, with effect from 19th January 1967. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

243. Notification issued with G.O. Ms. No. 1131, Home, dated the 15th April 1967, reducing the rate of tax payable in respect of the vehicle belonging to the German Leprosy Centre, Chetput, North Arcot district. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1937).]

244. Notification issued with G.O. Ms. No. 2393, Home, dated the 19th July 1966, exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931 motor cars bearing registration numbers C.C. 1192, C.C. 1193 and C.C. 1194 intended for the official use of the Consulate General of Japan at Madras. [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931)].